விற்பனை அளவிலேயும் கட்டுப்படுத்தினால் ஒழிய இந்த நிலையை சில ஆண்டுகளுக்கு ஒருமுறை நாம் சந்திக்கிறோம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முந்திரி தீவிர சாகுபடித் திட்டம்

*567 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முந்திரி தீவிர சாகுபடித் திட்டம் எந்தெந்தப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (1) திருச்சிராப்பள்ளி, (2) கரூர், (3) அரியலூர் பகுதிகள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கரூரில் எந்தெந்த ஊர்களில் முந்திரி சாகுபடி செய்ய அரசாங்கம் தற்பொழுது திட்டமிட்டிருக்கிறது? இதைத் தீவிரப்படுத்த விவசாயிகளுக்கு ஏதாவது உதவி செய்ய உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கரூர் பகுதி என்று இருக்கிறதேயொழிய எந்தெந்த ஊர் என்ற விவரத்திற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் தருகிறேன்.

திரு. எல். கணேசன் : தலைவரவர்களே, முந்திரி பயிரிடுவதில் புதுக்கோட்டை மாவட்டத்தில் தீவிரப்படுத்த வாய்ப்பு இருக்கிறது. அப்படி ஏதேனும் அரசு கவனத்தில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏராளமாக நிலத்தடி நீர் இருக்கிறது. அங்கே முந்திரி பயிரிடுவதைவிட வேறு பயிர்களில் அதிக வருமானம் வர முடியும் விவசாயிகளுக்கு.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த முந்திரி பயிரிட மணற்பாங்கான இடங்கள் இலாயக்கானதாக இருக்கின்றன. ஆகவே, அத்தகைய பகுதிகளில் கொண்டு வர உத்தேசம் உண்டா? நாட்டிலே முந்திரியை வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதால் நமக்குத் தொழில்களில் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் முனைப்புத் திட்டம் ஏதாவது செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.